**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 67/2020 |
| Name | : | Sivaprabhu |
| P.W. | : | 4 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**04.03.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.11.2019 ம் தேதி காலை 11.10 மணிக்கு நான் பணியில் இருந்த போது 58 வயது மதிக்கத்தக்க கண்ணன் என்பவர் தன்னை இரண்டு தெரிந்த நபர்கள் பாட்டிலாலும், மரக்குச்சியாலும் 03.11.2019 ம் தேதி காலை 08.00 மணி அளவில் பெருமாள் புதுார் வாய்க்கால் அருகில் வைத்து தாக்கியதாக கூறி அவராகவோ சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதித்து பார்த்த போது

1. 2*1*1 செ.மீ அளவில் சிதைந்த காயம் தலையின் இடது புறத்தில் காணப்பட்டது

2. இரு கண்களிலும் எரிச்சல் கலந்த வலி இருப்பதாக சொன்னார்

அவரை உள்நோயாளியாக அனுமதித்து 2 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.3 குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) காயம்பட்டவர் தன்னை தாக்கிய இரு நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக கூர்மையான பகுதியின் மேல் தன்னிச்சையாக விழுந்தால் இந்த காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை தன்னிச்சையாக விழுந்தால் அவ்வளவு விசையில் விழமுடியாது. காயம்பட்ட நபருக்கு தையல் போடப்பட்டது.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.04 12:27:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்